# புறநானூற்றில் கலைகள்

**முனைவர் அ. அனுடயானா**
**உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி - 02.**
**Email - anuselva007@gamil.com**

**16**

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் விலங்குகளைப் போல நாடோடிகளாய் திரிந்த நாகரிக மனிதனாக மாற்றிய பெருமை கலையினையே சாரும். நாடோடிகளாய்த் திரிந்த மனிதன் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கற்களால் ஆன ஈட்டி, கத்தி முதலான கருவிகளைக் கண்டுபிடித்தான். பிறகு இயற்கையின் சீற்றங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தனக்கென ஒரு உறைவிடத்தை அமைத்துக் கொண்டான் இவையாவும் அவனது கலைத்தன்மையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** அழல் – தீ, நெருப்பு, நுதல் - நெற்றி, கூழை - பெண்ணின் தலைமுடி

**முன்னுரை**

கலை என்பது கல்லுதல். கல் என்றால் தோண்டுதல், வெளிக்கொணருதல் என்று பொருள்படுகிறது. எனவே மனிதன் தன் மனதில் இப்படி ஒரு கருவியைக் கண்டுபிடித்தால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற ஒரு கலை உணர்வுக்கு ஆட்படுத்தப்படுகிறான். இதன் விளைவே கருவிகளின் கண்டுபிடிப்புகளை மனிதன் கண்டறிந்தான். கற்கால மனிதனை கலையானது நாகரிகம் பெற்ற மனிதனாக உருவாக்கியது. அடுத்தகட்டமாகிய சங்க காலத்திலும் அக்கால மக்களை கலை, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றில் தலைச் சிறந்தவனாகச் செய்து அவனது புகழை எங்கும் பரவச் செய்தது. இக்கலையானது வளர்ச்சி பெறும் பொழுது மனிதனது கலை உணர்வும் வளர்ச்சிப் பெற்றது. நாளுக்கு நாள் வளர்ந்து ஒரு புதிய கலையைப் படைக்கும் கலைஞனாகிறான். இக்கலைக் கூறுகள் புறநானூற்றில் எவ்வாறு கலைகள் அமைந்துள்ளன என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**புறநானூறு**

பழந்தமிழில் உள்ள தொகை நூல்களில் ஈடுஇணையற்ற நூல் புறநானூறு ஆகும். இந்நூல் பண்டைத் தமிழ் மக்களின் ஒழுகலாறுகளையும், பழக்க வழக்கங்களையும், பண்பாட்டுச் சிறப்புகளையும், நாகரிக மேம்பாட்டையும், தொழில்முறைகளையும், மக்களின் வாழ்க்கை நிலைகளையும் அறிய உதவும் அரிய களஞ்சியமாக விளங்குகிறது. அரசர்களே புலவராக விளங்கியமையும் அரசருக்கே புலவர்கள் அறிவுரைக் கூறுபவராக விளங்கியதைப் பற்றியும் குறிப்பிடுகிறது. மேலும் பெண்களுக்கு கல்வியில் சம உரிமை அளித்தமையைப் பற்றி அறிவதற்கும் புறநானூறு ஒரு கருத்துச் சுரங்கமாகத் திகழ்கிறது. தனி ஒருவரின் சொந்த அனுபவம் பற்றிய இலக்கியம் தன்னுணர்ச்சிப்பாடல்கள்.

தனி மனிதர்க்கும் மற்றவர்க்கும் அல்லது சமுதாயத்திற்கும் உள்ள உறவின் அனுபவம் பற்றிய இலக்கியமாகவும் திகழ்கிறது. புறநானூறு வாழ்வியல் நெறிக்களுக்கு இலக்கண நூலாகவும் திகழ்ந்துள்ளமையை எடுத்துரைத்துள்ளது.

**முன்னோர்களின் பழக்கவழக்கங்கள்**

இன்று பேருந்துகளில், தொடர்வண்டிகளில், வாடகை ஊர்திகளில், பொது இடங்களில் சிறுவர்க்கும் மூத்த குடிமக்களுக்கும் சூல் கொண்ட மகளிர்க்கும் சலுகைகள் காட்டப்படுகின்றன. இத்தகைய சலுகைகள் பழந்தமிழகத்திலேயே நம் முன்னோர்கள் காட்டியுள்ளனர் என்பது நமக்கு எத்துணைப் பெருமிதமும் பேருவகையும் தரக்கூடிய செய்தி ஆகும்.

மூத்தவர்களையும் சிறுவர்களையும் இலவசமாக இக்கரையிலிரிந்து அக்கரை சேர்க்கும் ஓடம் போல என்று (புறம் - 381 : 23 - 24) நன்னாகனார் எனும் புலவர் பாடுகிறார். எவ்வளவு புதுமையான செய்தி இது அறத்துறை அம்பி என்னும் தொடருக்கு உ.வே.சா. அவர்கள் தருமவோடம் என்றே பொருள் எழுதியுள்ளார். தமிழினம் மனிதாபிமானம் நிறைந்த இனம் என்பதற்கு இச்சான்று புலனாகின்றது.

**ஏழ்மையின் துயர் போக்கும் செல்வந்தர்**

சங்ககாலம் இனக்குழு சமுதாயம் தளர்ந்து வர்க்க சமுதாயம் மேலோங்கிய காலம். அக்காலத்தில் வாழ்ந்த நல்ல மனிதன் ஒருவன் செல்வந்தருக்கு உண்டாகும் துன்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் ஏழைபடும் இன்னல் தீர்க்கவே உதவினான் எனப் புறம் பேசும் செய்தி எத்துணை விழுமிய செய்தி ( புறம்- 329) நாட்டின் செல்வ செழிப்பினையும் இக்கலை மூலம் அறியலாம்.

**பண்டைய ஒப்பனைக் கலை**

கலை இயற்கையோடு இயைந்து இயற்கையில் கிடைக்கும் பொருள்களே ஒப்பனைக்கு பயன்படுத்தப்பட்டன. அழகு, கவின், வனப்பு, கோலம், எழில் போன்ற சொற்கள் சங்க இலக்கியங்களில் அழகைக் குறிக்க பயன்பட்டுள்ளன.

**கூந்தல் ஒப்பனை**

சங்க கால மகளிர் கூந்தல் ஒப்பனையில் பல வகையான முறைகளைக் கையாண்டு அழகுபடுத்திக் கொண்டனர். இன்று காணப்படும் கூந்தல் ஒப்பனை முறைகளுக்கு சங்க கால மகளிரே முன்னோடியாக விளங்கியுள்ளனர். அவர்கள் அழகு நிலையங்களுக்குச் செல்லாமல் தம்மைத் தாமே ஒப்பனை செய்துக் கொண்டனர். மேலும் கூந்தலைப் பின்னாமல் கட்டித் தொங்கவிட்டும், பின்னியும், கொண்டையாக முடிந்தும் அழகுப்படுத்திக் கொண்டனர். சான்றாக,

**"கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்" (புறம் - 61 : 1)**

என்ற வரிகளில் கொண்டை முடித்து அதிலே தழையும் செறுகி அழகுபடுத்திக் கொண்டதை அறியமுடிகிறது. ஆண்களும் கூந்தலில் பூவைச் சூடி அழகு படுத்தியமையை,

**"பாணர் தாமரை மலையவும்" (புறம் - 12 : 1)**

இவ்வரிகள் மூலம் பாணர் பொற்றாமரை பூவைச் சூடினர் என்ற செய்தி அறியமுடிகிறது. தலைவன் தன் கரிய கூந்தலில் பொன்னால் செய்த தாமரைப் பூவை பொன்னிலே கோத்து அணியாக்கி சூடியதைப் பற்றி,

**"அழல் புரிந்த சுடர்தாமரை**
**ஐதடர்ந்த நூற்பெய்து**
**புனையினைப் பொலிந்த பொல நறுந் தெரியல்**
**பாதுமயிர் இருந்தலை பொலியச் சூடி" (புறம் - 29 : 5-10)**

என்று இவ்வரிகள் மூலம் சங்க கால மக்களின் செல்வ செழிப்பினை காணமுடிகிறது. இன்றைய ஆடவர்கள் குடுமி இல்லாது முடிதிருத்தம் செய்வது போல புறநானூற்றுத் தலைவனும் காணப்பட்டான் என்பதை,

**"குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர்" (புறம் - 77 : 1-2)**

என்று குறிப்பிடுகிறது. இதனால் ஒப்பனைக்கு கண்ணாடியும், தலைமுடியினைக் குறைப்பதற்காக கத்தரியும், மலர்களையும், மாலைகளையும் இட்டு வைப்பதற்குரிய பூஞ்செப்பையும் பண்டைய மக்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது. சங்க காலமக்கள் தோலின் நலத்திற்கும் உடலின் ஒப்பனைக்கும் பலவகை நறுமணப் பொருட்களையும், வண்ண சாந்துகளையும் பயன்படுத்தி உடலை நலமுற அழகுபடப் பேணியதை,

**"நின் சாந்து புலர் அகலம் ஆங்க"" (புறம் - 47)**

என்ற வரிகள் தலைவனின் சாந்து புலர்ந்த மார்பகம் பற்றியச் செய்தியைக் குறிப்பிடுவதன் மூலம் புலனாகின்றது.

உடை

உலகமெல்லாம் மனிதர்களின் முதல் தேவை உணவும், உடையும் இதனை புறநானூறு,

""""உண்பது நாழி, உடுப்பவையிரண்டே"" (புறம்-189:5)

என்கிறது. பூ வேலை செய்யப்பட்ட உடைகளைத் தலைவன் தன் மேனியில் அணிந்த செய்தியினை,

"புரையோன் மேனிப் பூந்துகிற் கலிங்கம்
உரைசெல வருளியோனே
பறையிசை யருப் பாயற் கோவே"" (புறம் - 398)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. குலக்கச்சை ஆடையினையும் பூந்தொழில் செய்யப்பட்ட ஆடையினையும் அணிந்தமையை,

"நீலக் கச்சைப் பூவார் ஆடைப்"" (புறம் - 274)

என்றும் புலவனுக்குத் தலைவன் கந்தல் ஆடையை நீக்கி புத்தாடை அளித்தமையை,

"என் அரை
முதுநீர்ப் பாசி அன்ன உடைகளைந்து
திருமலர் அன்ன புதுமடிக் கொளீஇ"" (புறம் - 390 : 13-15)

என்ற அடிகள் மூலம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

புறநானூற்றில் கலைகள் என்ற கட்டுரையின் மூலமாக புறநானூற்று இலக்கியம் ஒரு கவின் கலை இலக்கியமாகவும் அதில் விளைந்த கலைகள் மக்களின் வாழ்வியலோடு ஒன்றாக கலந்து வாழ்க்கை செம்மையுற நடைப்பெறுவதற்கும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கும் நாகரிகமாக நடந்து கொள்வதற்கும் பெரும் சான்றாகத் துணைபுரிந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. பழனிச்சாமி.செ. - புறநானூற்றில் தமிழர் பண்பாடு,
வாணி பதிப்பகம்,
சென்னை - 402.
முதற்பதிப்பு - 1989.

2. அங்கயற்கண்ணி - இசையும் இலக்கியமும்,
கலையக வெளியீடு,
சுவாமி பிள்ளைத்தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
முதற்பதிப்பு - 1991.

3. கௌமாரீஸ்ரி.எஸ் (ப.ஆ) - அபிதானசிந்தாமணி,
சீதை பதிப்பகம்,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
முதற்பதிப்பு - 2004.

4. பாக்கிய மேரி.எ - காலந்தோறும் தமிழர் கலைகள்,
பூவேந்தர் வெளியீடு,
சென்னை - 4.
முதற்பதிப்பு -2005.

5. பெருமாள் சாமி.வெ - சங்க கால தமிழகத்தின் சமூக நிலை - மார்க்கஸிய நோக்கு,
பாரதி புத்தகாலயம்,
தேனாம் பேட்டை,
சென்னை - 18.
முதற்பதிப்பு -2007.

6. திலகவதி - சங்க கால மகளிர் வாழ்வியல்,
இறையருள் பதிப்பகம்,
சக்தி நகர், காட்டூர்,
திருச்சி - 19.